**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4878/ஆ5/2023, நாள்.24.11.2023**

.....

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – குழந்தைகளுக்கு எதிரான வன்முறைத் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு வாரம் (நவம்பர் 18 முதல் 24 வரை) அனுசரிக்கப்படுகிறது – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக |
| பார்வை | சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணித்திட்டம்) செயல்முறைகள் ந.க.எண்.69199 /எம்/இ1/2023, நாள். 23.11.2023 |

•••••

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணித்திட்டம்) செயல்முறைகளுக்கிணங்க, குழந்தைகளுக்கு எதிரான வன்முறை மற்றும் விழிப்புணர்வு வாரமாக (நவம்பர் 18 முதல் 24வரை ) அனுசரிக்கப்படுகிறது. இது தொடர்பான துண்டு பிரசுரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. காலை இறைவணக்கக் கூட்டத்தின்போது மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், பள்ளித் தகவல் பலகையில் பள்ளிக் கல்வித் துறையின் மாணவர் உதவி எண் மற்றும் குழந்தைகளுக்கான அவசர உதவி எண்ணினை தெரிவிக்க வேண்டும். மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள (Posters) சுவரொட்டிகள் நகலினை மாணவர்கள் அறியும் வண்ணம் வகுப்பறைகளில் இடம்பெறச் செய்து அதன் புகைப்பட நகல் இவ்வலுவலக (velloreceo@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – சுவரொட்டிகள் (Posters)

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அனைத்து வகை பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.
நகல்.
சென்னை –6, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித்திட்டம்)
அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

# குழந்தைகளுக்கு எதிரான வன்முறைத் தடுப்பு வாரம் (நவம்பர் 18 முதல் 24 வரை)

# தொடுதல் பற்றிய ரகசியம்







உங்களை விருப்பமில்லாமல் மற்றவர் தொடுவதை ரகசியமாக வைப்பது பாதுகாப்பு இல்லை. யாராவது அதை ரகசியமாக வைக்கச் சொன்னால் உடனே நீங்கள் உங்களுக்கு நெருக்கமானவர்களிடம் மறைக்காமல் சொல்லி விட வேண்டும்

பள்ளிக் கல்வித் துறையின் மாணவர் உதவி எண்

**14417**

குழந்தைகளுக்கான அவசர உதவி எண்

**1098**

பள்ளிக் கல்வித் துறை (TNSED)

| @tnschoolsedu

குழந்தைகளுக்கு எதிரான
வன்முறைத் தடுப்பு வாரம்

நவம்பர் 18
முதல்
24 வரை

# நீங்கள் பாதுகாப்பாக இருக்க என்ன செய்யணும்

#Child Safety Tips



**சிலர் பரிசு,பணம், சாக்லேட் கொடுத்து அவர்கள் சொல்லும்படி நடக்கச் சொல்வார்கள், அப்போது நீங்கள் பாதுகாப்பாக இல்லாததது போல் உணர்ந்தால் அவர்கள் சொல்வதைச் செய்ய வேண்டாம், பரிசையும் வாங்க வேண்டாம்**

நவம்பர் 18 முதல் 24 வரை விழிப்புணர்வு வாரம்



## உங்கள் உடலுக்கு நீங்கதான் 'Boss'

**உங்கள் உடல் உங்களுக்கு மட்டுமே சொந்தம், அதை எந்த வழியிலும் மற்றவர் தொடவோ, காயப்படுத்தவோ அனுமதி இல்லை.**

## குழந்தைகளுக்கு எதிரான வன்முறைத் தடுப்பு வாரம்

# உதவிக்கு அழைக்கலாம்

பள்ளிக் கல்வித் துறையின்
மாணவர் உதவி எண்

**14417**

குழந்தைகளுக்கான அவசர உதவி எண்

**1098**